24.05.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### மணிலாவில் மகசூல் அதிகரிக்க நிலக்கடலை ரிச் தெளிக்க வேண்டும்:வேளாண் உதவி இயக்குநர் தகவல்

விவசாயிகள் மணிலா பயிரில் அதிக மகசூல் பெற நிலக்கடலை ரிச் தெளிக்க வேண்டும் என தண்டராம்பட்டு வேளாண் உதவி இயக்குநர் அ.பாலா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியுள்ளதாவது: தண்டராம்பட்டு வட்டத்தில் சிறப்பு பட்ட நிலக்கடலை பரவலாக பயிரிடப்பட்டுள்ளது. தற்போது மணிலா பயிர் பூ பூக்கும் பருவத்தில் உள்ளது.

இந்தப் பருவத்தில் நுண்ணூட்டச்சத்துக் கலவையான நிலக்கடலை ரிச்-ஐ ஏக்கருக்கு 2 கிலோ என்ற அளவில் 200 லிட்டர் நீரில் கலந்து, கைத்தெளிப்பான் மூலம் மாலை வேளையில் தெளிக்க வேண்டும்.

பின்னர், 15-லிருந்து 20 நாள்கள் கழித்து மீண்டும் ஒருமுறை இதே கரைசலைத் தெளிக்க வேண்டும். நிலக்கடலை ரிச்-ஐ தெளிப்பதன் மூலம் பூக்கள் அதிகம் பூக்கும். திரட்சியான மணிலா காய்கள் உண்டாகி அதிக மகசூல் உண்டாகும்.

இந்த நிலக்கடலை ரிச் நுண்ணூட்டச்சத்து கலவை தண்டராம்பட்டு வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டு, 50 சதவீத மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த வாய்ப்பை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என தண்டராம்பட்டு வேளாண் உதவி இயக்குநர் அ.பாலா கேட்டுக்கொண்டுள்ளார்.

**ஏரி வண்டல் மண் எடுக்க அனுமதி அளிக்க வலியுறுத்தல்**

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்களில் வண்டல் மண் எடுத்து, விவசாயத்துக்கு பயன்படுத்திக் கொள்ள அனுமதி அளிக்க வேண்டுமென இயற்கை வேளாண்மை இயக்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து, ஆட்சியர் க. நந்தகுமாரிடம் தமிழ்நாடு இயற்கை வேளாண்மை இயக்கத்தினர் அளித்த மனுவில் தெரிவித்துள்ளதாவது:

மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்கள் கடந்த பல ஆண்டுகளாக தூர்வாரப்படாமல் தூர்ந்துள்ளது. மேலும், பல ஏரி, குளங்களில் சீமைக்கருவேல மரங்களும், நாட்டுக் கருவேல மரங்களும் வளர்ந்து அடர்ந்துள்ளது. இதனால், நீர்ப்பிடிப்பு பகுதிகள் குறைந்துவிட்டது. நீர்நிலைகளுக்கு மழைநீர் வரக்கூடிய வரத்து வாய்க்கால்கள், வடிகால் வாய்க்கால்கள் அனைத்தும் தூர்வாரப்பட்டு, ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு நீர்நிலைகளின் கரைகளில் மரக்கன்றுகள் நட்டு அவற்றை பாதுகாக்க வேண்டும்.

ஏரி, குளங்களின் உண்மையான பரப்பளவு, நீர் வழித்தடங்கள் ஆகியவை அளவிடப்பட்டு, அதன் முழுமையான பரப்பளவை மீட்க வேண்டும். மேலும், ஒவ்வொரு ஏரி, குளங்களின் பரப்பளவுடன் கூடிய தகவல் பலகையை அப்பகுதியில் வைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

ஏரி, குளங்களில் உள்ள வண்டல் மண்ணை எடுத்து விவசாயிகள் பயன்படுத்தி, வேளாண்மையை வளப்படுத்தி, விளைச்சலை அதிகரிக்கவும், செயற்கை உரங்களின் நச்சுப் பிடியிலிருந்து விடுபடவும், ஏரி, குளங்களின் வண்டல் வீழ்படிவினை எடுத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும். எனவே, பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்களை தூர்வாரவும், வண்டல் மண் எடுக்கவும் மாவட்ட நிர்வாகம் அனுமதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

மனுவை பெற்றுக்கொண்ட ஆட்சியர் நந்தகுமார், ஏரி, குளங்களில் எந்தெந்த வாகனத்தின் மூலம் மண் அள்ளப்படுகிறது என்பதை முன்கூட்டியே மாவட்ட நிர்வாத்திடம் தகவல் அளித்துவிட்டு, விவசாய பயன்பாட்டுக்காக வண்டல் மண் எடுத்துக்கொள்ளலாம் என்றார் அவர்.

## 5 கிலோ எடையுள்ள அபூர்வ காளான்



விசாகப்பட்டினத்தில் 5 கிலோ எடையுள்ள அபூர்வ காளான் விளைந்தது.

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் மாவட்டத்தில் மழை பெய்து வருகிறது.

அங்குள்ள மண்யம் பகுதி பாடேறுவில் கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து பெய்த மழையில் விவசாய நிலத்தில் பல இடங்களில் காளான்கள் முளைத்துள்ளது.

அதில் விவசாயி கேசசாய் ராஜுவின் விளை நிலத்தில் 5 கிலோ எடையுள்ள ராட்சதக் காளான் முளைத்தது.

அதனைக் கண்டு அனைவரும் ஆச்சர்யம் அடைந்தனர். அவர் அந்த காளானை விற்க பாடேறு சந்தைக்கு கொண்டு சென்றார்.

## இயற்கையைப் பாதுகாப்போம்!

ஆதிகாலத்தில் வேதங்களில் சூத்திரங்களாகச் சொல்லப்பட்டதே இயற்கை விவசாயம். கால்நடைக் கழிவுகள், மூலிகைகள் ஆகியன மட்டுமே இடு பொருள்கள். கழிவுகள் உரமாகவும், மூலிகைகள் பூச்சி விரட்டியாகவும், வளர்ச்சியை ஊக்குவிப்பதாகவும் இருக்கிறது. வேதகாலத்து ரிஷிகள் மோர், பால், தயிர், பசுவின் கோமியம் ஆகியவற்றை பயிர்களின் வளர்ச்சி ஊக்குவிப்பானாகப் பிரயோகித்துள்ளனர். இதனை வன்முறை இல்லாத விவசாயம் எனலாம். மனித உழைப்பு இதற்கு அதிகம் தேவையில்லை. மத்தியப் பிரதேசம், பஞ்சாப், மகாராஷ்டிரம், ஆந்திரம், தமிழகத்தில் இதற்கு நல்ல வரவேற்பு உள்ளது.

மண், நீர், காற்று, செடிகொடிகள், பூச்சிகள், நுண்ணுயிரிகள் மற்றும் விலங்கினம் ஆகியவையும் சேர்ந்து கொண்டு ஒருவிதமான இணக்கமான இசையை மேற்கொள்வதாகத்தான் தோன்றுகிறது இயற்கை விவசாயத்தில்.

இந்த இயற்கை விவசாயம் பெருமளவில் இயற்கையையே ஒத்ததாய், மனிதரின் இடு பொருள்களை மறுதலிப்பதாய் உள்ளது. உள்ளூர் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு செய்யப்படும் விவசாயம் இது. எண்ணற்றோர் அருந்தொண்டு ஆற்றியே நம் சுற்றுச்சூழலைக் காப்பாற்றிக் கொண்டு வருகிறார்கள். ஒவ்வொருவரும் தனித்துவமாய், அவரவர் காலத்திற்கு ஏற்றவிதத்தில்.

வங்கரி முட்டா மாத்தாய் என்ற கென்யாவைச் சேர்ந்த சூழலியல்வாதியை நாம் நிச்சயம் நினைவு கூற வேண்டும். க்ரீன் பெல்ட் இயக்கம் என்ற அமைப்பின் மூலம் ஆப்பிரிக்கப் பெண்களை ஒன்றுதிரட்டி காடுகளை அழிப்பதற்கு எதிராகப் போராடியவர் அவர். இந்த க்ரீன் பெல்ட் இயக்கத்தவர் 30 மில்லியன் மரங்களுக்கு அதிகமாக நட்டு வளர்த்துள்ளனர்.

சுற்றுச்சூழலுக்காக அவர் ஆற்றிய பணியை நினைவுகூறும் விதமாக சிவப்பு மேப்பிள் மரங்கள் இரண்டை வளர்த்து பூந்தோட்டம் ஒன்றையும்

நிறுவி உள்ளது பிட்ஸ்பர்க் பல்கலைக்கழகம். இவர் 2004-இல் நோபல் பரிசு பெற்றுள்ளார்.

இவர் பெயரில் ஒரு பரிசு நிறுவப்பட்ட ஆண்டிலேயே இதை வென்றவர் நேபாளத்தைச் சேர்ந்த நாராயண் காஜிசிரேஷ்தா - நேபாளத்தின் சமூகக் காடுகள் இயக்கத்திற்கு அயராத தொண்டாற்றி உள்ளார்.

தனி மனிதர்கள் மட்டுமன்றி, பொதுமக்களே முன்நின்று சூழலைக் காப்பாற்றப் போராடிய சம்பவங்கள் நம் நாட்டில் ஏராளம். 80-களில் சிப்கோ போராட்டம் அதில் குறிப்பிடத் தகுந்தது.

சான்டி பிரசாத் பட் மற்றும் சுந்தர் லால் பஹுகுணா தலைமையில் அதிகம் படிக்காத மலை ஜாதிப் பெண்கள் நடத்திய போராட்டம் அது. வெட்டவரும் மரத்தினைக் கட்டிப்பிடித்துக் கொண்டு எத்தனை நேரமானாலும் நின்றார்கள் இப் பெண்கள்.

அண்டை மாநிலமான கேரளத்தில் சைலண்ட் வேலி நீர்மின் திட்டத்திற்காக குந்தி புழா ஆற்றின் குறுக்கே அணைகட்டி, 4 மில்லியன் வருடங்களான மழைக் காடுகளையும் உயிர்க்கோளக் காப்பகத்தையும் (ரிசர்வையும்) அழிக்க முற்பட்டதையும் மக்கள் சக்தி வென்றது.

80-களில் பிகாரின் சிங்பம் மாவட்டத்தில் இயற்கையான சால் மரங்களை வெட்டிவிட்டு தேக்கு மரங்களை நடப்போனபோது எதிர்த்து நடைபெற்ற இயக்கம் ஜங்கிள் பச்சாவோ அந்தோலன். இது பிறகு ஜார்க்கண்ட், ஒரிசா என பிற மாநிலங்களுக்கும் பரவியது.

வந்தனா சிவா கரிம வேளாண்மைக்காக நவதான்யா என்ற நிறுவனத்தை ஏற்படுத்தி பல இயற்கை விவசாயிகள் உருவாக, தரமான உணவு நுகர்வோராக நாம் மாற உதவியுள்ளார்.

இந்தியாவின் ராஜேந்திர சிங், ஸ்டாக்ஹோம் நீர் பரிசினை வென்றது நினைவில் இருக்கும். இவர் இந்தியாவின் நீர் மனிதர் என்றே அழைக்கப்படுகிறார். பல ஆறுகள் அவரால் காப்பாற்றப்பட்டன. பல ஆறுகளின் குறுக்கே அணைகள் கட்டி நீர் மேலாண்மை செய்துள்ளார்.

மழைநீர் சேமிக்கும் தொட்டிகள் ஜோஹத்கள் என்பன சுமார் 8,600 இவரால் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அர்வாரி ஆறு சுமார் 60 ஆண்டுகளாக ஓடவே இல்லை. 1986-இல் நீர்த் தேக்கம் கட்டி, 375 தடுப்பு அணைகளை ஏற்படுத்தி 95-இல் அழகாக ஓட ஆரம்பித்தது இந்த

ஆறு.

இவருக்குப் பரிசு கிடைத்தபோது ஸ்டாக் ஹோம் சர்வதேச நீர் கழகத்தின் செயல் இயக்குநர் சொன்னார்: சிங் ஒரு நம்பிக்கை நட்சத்திரம். அவர் தன் செயல்பாட்டால் கிராமங்களை உயிர்த்தெழச் செய்திருக்கிறார் என்றார். மிகச் சரியாகத்தான் சொல்லியுள்ளார் என்று தோன்றுகிறது.

மகேஷ் சந்திர மேத்தா பொதுநல வழக்கறிஞர். இவர் 96-இல் கோல்டு மேன் சுற்றுச்சூழல் பரிசு வாங்கினார். தொடர்ந்து, இந்திய நீதிமன்றங்களில் மாசுபடுத்தும் தொழிற்சாலைகளுக்கு எதிராகப் போராடி வந்துள்ளார். 1997-இல் ராமன் மகசேசே விருது கிடைத்தது; 2016-இல் பத்மஸ்ரீ விருது கொடுத்து கௌரவித்துள்ளது மோடி அரசு.

சத்தீஸ்கரைச் சேர்ந்த ரமேஷ் அகர்வாலுக்கு வழக்குத் தொடுப்பதில் முன்னவர் போல் பயிற்சி எதுவும் இல்லை. இருந்தும் ஜிண்டால் ஸ்டீல்ஸ் கம்பெனி இரண்டாவது நிலக்கரிச் சுரங்கத்தினை அவரது கிராமத்து அருகில் திறக்க நினைத்தபோது சத்தீஸ்கர் மாநில கிராமத்து மக்களைத் திரட்டி நில அபகரிப்பு மற்றும் சுற்றுச்சூழல் மாசுபடுதலுக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கினார்.

அவரது கால்களில் துப்பாக்கி குண்டுகளைப் பாய்ச்சினர் சமூக விரோதிகள். சான்ஃபிரான்சிஸ்கோ நகரில் பசுமை நோபல் பரிசு அறிவித்து 1,75,000 (ரூ. 1.13 கோடி) அமெரிக்க டாலர்களுடன் பரிசளித்தது அமெரிக்கா.

இப்படி பல்வேறு மக்கள் தொடர்ந்து பல வகைகளில் இயற்கை வேளாண்மை, புவி வெப்பமயமாதலுக்கு எதிராக பணி, நீர் நிலைகளை ஆக்கிரமிப்புகளில் இருந்து பாதுகாக்கல், தடுப்பணைகள் மூலம் கிராமத்து மக்களுக்கு வாழ்வாதாரத்தினை மேம்படுத்தல் எனப் பலவகைகளில் பங்களிப்பினைச் செய்துள்ளனர்.

அவர்களை நினைவுகூர்ந்து அவர்களின் செயல்பாடுகளைப் போற்றி, அவர்கள் வழி நடப்பதே நம் ஒவ்வொருவரின் கடமை.

## கொடைக்கானலில் கோடை பலாப்பழம் வரத்து

கொடைக்கானலில் கோடை காலத்தில் விளைந்து விற்பனைக்கு வந்துள்ள பலாப் பழத்தை சுற்றுலாப் பயணிகள் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர்.

கொடைக்கானலில் தற்போது பாலமலை, அடுக்கம், பண்ணைக்காடு, கே.சி.பட்டி, தாமரைக்குளம் உள்ளிட்ட இடங்களில் கோடைக் கால பலாப்பழம் விளைந்துள்ளன. சுவைமிகுந்த இந்தப்பழங்கள் அறுவடை செய்யப்பட்டு கொடைக்கானல் மலைச் சாலைகளான ஊத்து, வடகரைப்பாறை, மச்சூர், குருசடி மெத்து ஊள்ளிட்ட பகுதிகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

கொடைக்கானல் வரும் சுற்றுலாப் பயணிகள் இவற்றை விரும்பி வாங்கிச் செல்கின்றனர்.

இது குறித்து பழவியாபாரி முத்துக்குமார் கூறியதாவது, கொடைக்கானல் பகுதிகளில் உள்ள எஸ்டேட்டுகளில் தற்போது கோடைக்கால பலாப்பழங்கள் விளைந்துள்ளன. தற்போது சீசன் நேரமாக உள்ளதால் பலாப் பழங்கள் நன்கு விற்பனையாகின்றன. பழத்திற்கு தகுந்தபடி, ஒரு பழம் ரூ.120 முதல் ரூ. 200-வரை விற்பனை செய்யப்படுகின்றன என்றார்.

## விசைப்படகுகளில் மீன்துறை அதிகாரிகள் ஆய்வு

ராமேசுவரம் பகுதியிலிருந்து மீன்பிடிக்கச் செல்லும் விசைப்படகுகளை மீன்துறை அதிகாரிகள் திங்கள்கிழமை ஆய்வு செய்தனர்.

மீன்கள் இனப்பெருக்கத்திற்காக ஏப்ரல் 15 முதல் மே 29 தேதி வரை 45 நாள்களுக்கு தமிழக அரசு மீன்பிடி தடைக்காலம் விதித்துள்ளது. இதனால் ராமேசுவரம், பாம்பன், மண்டபம் பகுதிகளைச் சேர்ந்த 1300க்கும் மேற்பட்ட படகுகள் கடலில் நங்கூரமிட்டு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்த தடைக் காலத்தில், படகுகளின் பராமரிப்பு, பழுது சரிசெய்தல், என்ஜின், மீன்பிடி சாதனங்களை மீனவர்கள் சரி

செய்து வருகின்றனர். தடைக்காலம் முடிய சில நாள்கள் மட்டுமே இருப்பதால் கடலில் தயார் நிலையில் இருந்த 850 படகுகளின் தன்மை குறித்து மீன்துறை அதிகாரிகள் திங்கள்கிழமை ஆய்வு செய்தனர். ராமநாதபுரம் மாவட்ட மீன்துறை துணை இயக்குநர் காசிநாதபாண்டியன் தலைமையில் 69 அதிகாரிகள் 23 குழுக்களாக பிரிந்து கடலில் நிறுத்தப்பட்டிருந்த படகுகளின் நீளம், அகலம், என்ஜின் தன்மை, மீன்பிடி சாதனங்கள், படகு உரிமம் உள்ளிட்ட ஆவணங்களை ஆய்வு செய்தனர். மீன்துறை உதவி இயக்குநர்கள் கோபிநாத், ரவிச்சந்திரன், சிவராம் மற்றும் மண்டபம், தொண்டி, ஏர்வாடி, ராமேசுவரம் பகுதிகளை சேர்ந்த மீன்துறை அதிகாரிகளும், அலுவலர்களும் ஆய்வில் பங்கேற்றனர்.

## பழக் கண்காட்சியில் பயன்படுத்திய பழங்களில் ஜாம் தயாரிக்க ஏற்பாடு

குன்னூர் சிம்ஸ் பூங்காவில் பழக் கண்காட்சியில் கலங்கரை விளக்கம் மாதிரியை உருவாக்கப் பயன்படுத்திய பழங்களை ஜாம் மற்றும் ஜெல்லி தயாரிக்க பயன்படுத்தவுள்ளதாக தோட்டக் கலைத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

குன்னூர் சிம்ஸ் பூங்காவில் ஆண்டுதோறும் மே மாதத்தில் பழக் கண்காட்சி நடத்தப்படுவது வழக்கம். இதில் பழங்களை கொண்டு பல்வேறு உருவ மாதிரிகள் உருவாக்கப்படுவது வழக்கம். இந்த உருவ மாதிரிக்காக பழங்களில் ஓட்டைப் போட்டும் கம்பிகளில் இணைத்தும் பழங்களை பயன்படுத்தி வந்ததால் இவை மூன்று நாள்களில் அழுகி கெட்டு போகும். எனவே, பல டன் பழங்களை குழித்தோண்டி புதைத்து வந்தனர். இதன் காரணமாக லட்சக்கணக்கான பணம் விரயமானது.

இதனைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டு மாதிரிகளை உருவாக்க பழங்களில் ஓட்டைப் போடாமல் கயிறுகளை மட்டும் வைத்து கட்டி 10 அடி அகலம் 25 அடி உயரம் கொண்ட கலங்கரை விளக்கம், 15 அடி நீளம் 10 அடி உயரத்தில் அமைக்கப்பட்டிருந்த பாய்மரக் கப்பல் ஆகியவற்றை உருவாக்கிய பழங்களில் தரமானதை மட்டும் பிரித்தெடுத்து, அவற்றில் ஜாம், ஜெல்லி உள்ளிட்டவற்றை உற்பத்தி செய்ய தோட்டக் கலைத் துறையினர் முடிவெடுத்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**கோழிகள், வாத்துகள் இறந்தால் தெரிவிக்க வேண்டும்**

கர்நாடகத்தில் பறவைக்காய்ச்சல் நோய் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதையடுத்து கரூர் மாவட்டத்தில் கோழிகள், வாத்துகள் மற்றும் காக்கைகள் போன்ற பறவை அதிகமாக இறந்தால் உடனடியாக கால்நடை மருத்துவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்றார் மாவட்ட முதுநிலை ஆட்சியர் காகர்லாஉஷா.

பறவைக் காய்ச்சல் தடுப்பு தொடர்பாக மாவட்ட ஆட்சியரகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்திற்கு தலைமை வகித்து மேலும் அவர் பேசுகையில்,

தற்போது அண்டை மாநிலமான கர்நாடகத்தில் பறவைக்காய்ச்சல் உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து அம்மாநிலத்திலிருந்து கோழிகள், முட்டைகள், தீவனங்கள் எதுவும் தமிழ்நாட்டிற்குள் வராமல் தடுக்க சோதனைச்சாவடிகள் மூலம் சோதனை செய்து அவை அம்மாநிலத்திற்கே திருப்பி அனுப்பப்படுகின்றன.

கரூர் மாவட்டத்தில் 358 கோழிப்பண்ணைகள் மூலம் 22 லட்சம் கோழிகள் வளர்க்கப்படுகின்றன.

இந்தக் கோழிப்பண்ணைகள், 30 கால்நடை உதவி மருத்துவர்களைக்கொண்டு அதிவிரைவுப்படை அமைக்கப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன. மேலும், இறந்த கோழிகளை முறையாக எரிக்கவோ, அல்லது குழிகளில் புதைக்கவோ அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கோழிப்பண்ணைக்குள் நுழையும் வாகனங்கள் மற்றும் நபர்கள் முறையான கிரிமி நாசினியைப் பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், கோழிகள், வாத்துகள் மற்றும் காக்கைகள் போன்றவை அதிகளவில் இறந்தால் உடனடியாக கால்நடை மருத்துவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

நகர்ப்புறங்களில் இயங்கி வரும் இறைச்சிக் கடைகளில் உண்டாகும் கழிவுகளை முறையாக சுகாதார முறைப்படி அப்புறப்படுத்த துறை சார்ந்த அலுவலர்கள் கண்காணித்திட வேண்டும். பொது சுகாதாரத்துறை, வனத்துறை, ஊராட்சி, பேரூராட்சிப் பகுதிகளில் பணியாளர்கள் மூலம் ஊரகப் பகுதிகளில் முழுமையாகக் கண்காணித்து வருவதுடன் கால்நடைப் பராமரிப்புத் துறை மூலம் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், கோழி வளர்ப்போர், இறைச்சிக்கடை

வைத்திருப்போர் மற்றும் பொதுமக்கள் ஆகிய அனைவரும் பறவைக்காய்ச்சலை தடுக்க விழிப்புடன் இருக்க வேண்டும் என்றார்.
கூட்டத்தில் கால்நடைப் பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் பழனிவேல், துணை இயக்குநர் கதிர்வேல், உதவி மருத்துவர் முருகேசன், வனத்துறை, விவசாயத்துறை, பஞ்சாயத்து வளர்ச்சித்துறை, பொதுப்பணித்துறை, பேரூராட்சி செயல் அலுவலர்கள், நகராட்சி அலுவலர்கள், பொது சுகாதாரத்துறை அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## எலுமிச்சை செடியில் மாவுப்பூச்சி தாக்குதல் நோய் விவசாயிகள் கவலை

பழநி : பழநி அருகே ஆயக்குடி பகுதியில் அதிகளவில் ஏராளமான கொய்யா, நெல்லி, சப்போட்டா, எலுமிச்சை, மிளகாய், கத்திரி, பருத்தி உள்ளிட்டவை அதிகளவில் பயிரிடப்படுகின்றன. இவை தமிழகத்தில் திருப்பூர், திருச்சி, கோவை உள்ளிட்ட பகுதிகளுக்கும், கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கும் அதிகளவில் அனுப்பி வைக்கப்படுகின்றன.

இந்நிலையில் இச்செடிகளில் மாவுப்பூச்சி மற்றும் வெள்ளை ஈக்களின் தாக்குதல் அதிகளவில் ஏற்பட்டுள்ளது. இதனால் செடிகளின் கொழுந்துகள் தங்களின் முளைப்புத் தன்மையை இழந்துள்ளன. மேலும் காய்கள் பூச்சி தாக்குதலுக்கு ஆளாகி புள்ளிகள் விழுந்துள்ளது. எலுமிச்சை மட்டுமின்றி சப்போட்டா, எலுமிச்சை, கொய்யா உள்ளிட்ட மற்ற காய்களும் இதே பாதிப்பிற்கு ஆளாகி உள்ளன.

யானை தொந்தரவால் அவதிக்குள்ளான விவசாயிகளுக்கு தற்போது மற்றுமொரு தொந்தரவாய் இந்நோய் தாக்குதல் அமைந்துள்ளது. இதுகுறித்து தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கூறுகையில், ‘பழநி பகுதியில் கடந்த ஜனவரி மாதம் முதலே போதிய மழை இல்லை. அதனால் இப்பூச்சியின் இனப்பெருக்கம் அதிகரித்துள்ளது. ஆரம்ப கட்டமாக இருந்தால் வேம்பு எண்ணெயை கலந்து அடித்தால் போதுமானது. முற்றிய நிலையில் 1 லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி புரபனோபாஸ் கலந்து அடிக்கலாம். அல்லது 10 லிட்டர் தண்ணீருடன் 6 மில்லி இமியோகுளோபிரிட் கலந்து அடிக்கலாம்.

அல்லது 1 லிட்டர் தண்ணீரில் 2 கிராம் நீட்டோமைல் கலந்து கைப்பம்பு மூலம் அடிக்கலாம். பார்த்தீனிய செடிகளின் மூலமே இப்பூச்சி பரவுவதால் விவசாயிகள் இச்செடிகளை உடன் அகற்றி விட வேண்டும். மேலும், விபரங்களுக்கு பழநி தோட்டக்கலைத்துறை அலுவலகத்தை அணுகலாம். விவசாயிகளுக்கு இதுகுறித்து விழிப்புணர்வு முகாம் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு கூறினர்.

## நத்தம் பகுதியில் மாம்பழ அறுவடை சீசன் மும்முரம்

நத்தம், : நத்தம் பகுதியில் மாம்பழ அறுவடை சீசன் மும்முரமாக நடந்து வருகிறது. நத்தம் பகுதியில் பரளி, சமுத்திராபட்டி, காசம்பட்டி, செந்துறை, குட்டுப்பட்டி, அரவங்குறிச்சி, சிறுகுடி, சிலுவத்தூர், மலைக்கேணி, திம்மணநல்லூர், செடிப்பட்டி, வேம்பார்பட்டி, அஞ்சுகுளிபட்டி, சாணார்பட்டி, உலுப்பகுடி, புன்னப்பட்டி உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இங்கு சுமார் 10 ஆயிரம் ஏக்கருக்கு மேல் மாமரங்கள் வைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

கடந்த மார்ச் மாதம் மாம்பழ அறுவடை சீசன் தொடங்கியது. இருப்பினும் கடும் வறட்சியின் காரணமாக விவசாயிகள் எதிர்பார்த்த மாம்பழ விளைச்சல் அதிகம் இல்லை. மேலும் ஆங்காங்கே மாந்தோப்புகளில் ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து அதன் மூலம் கிடைக்கப் பெறும் தண்ணீரை பயன்படுத்தி மாமரங்களை விவசாயிகள் பராமரித்து வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது அறுவடையாகும் மாங்காய் ரகம் கிலோ ஒன்றுக்கு கல்லாமை ரகம் ரூ.15 லிருந்து ரூ.20க்கும் காளாப்பாடி ரகம் ரூ.30 லிருந்து 40க்கும், பாலாமணி ரூ.20 லிருந்து 35க்கும், இமாம்பஜந்த் ரூ.50 லிருந்து 60க்கும், சப்பட்டை ரகம் ரூ.40லிருந்து 45க்கும், ஊறுகாய் நாட்டு மாங்காய் ரூ.10 லிருந்து 12 வரைக்கும் விற்பனையாகிறது. இதுகுறித்து தென்னை, மா, புளி பழப்பண்ணை அமைப்பு குழு தலைவர் வேம்பார்பட்டி கண்ணுமுகமது கூறியதாவது:

கடந்த வருடத்தை விட இந்த வருடம் பருவமழை குறைவு காரணமாகவும், நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்து போனதாலும், மகசூல் பாதியாக குறைந்து விட்டது.

இதனால் விவசாயிகளுக்கு எதிர்பார்த்த லாபம் கிடைக்கவில்லை. இருப்பினும் தற்போது அறுவடையாகும் மாங்காய்களுக்கு தேவையான விலை கிடைத்தாலும் விவசாயிகளுக்கு பராமரிப்பு, அறுவடை, வாடகை உள்ளிட்ட பல்வேறு செலவினங்கள் கூடிக்கொண்டே போகிறது. இதனால் காலப்போக்கில் மாமரங்களை பராமரிப்பது பெரும் சிரமமாக அமையும். கடந்த வாரம் பெய்த புயல் மழையினால் தற்போது இருக்கக் கூடிய மாங்காய்கள் நீர்ச்சத்து அதிகம் காணப்பட்டு ஒரு மாங்காய்க்கு 10 கிராம் வீதம் பருமன் கூடியுள்ளது. இதனால் விவசாயிகளுக்கு ஓரளவு மாங்காய்களின் எடை கூடியுள்ளதால் விலை கிடைக்க வாய்ப்புள்ளது. மாம்பழ சீசன் ஜூன் மாதம் கடைசியில் முடிவுக்கு வரும். இவ்வாறு தெரிவித்தார்.

## காரைக்குடி தாலுகாவில் கோடை வெயிலால் கருகிய மக்காசோளம்

காரைக்குடி : காரைக்குடி தாலுகாவிற்குட்பட்ட சாக்கோட்டை, கல்லல் ஒன்றிய பகுதிகளில் நெல் மற்றும் தோட்டக்கலை பயிர்கள் அதிக அளவில் பயிரிடப்படுகிறது. ஏற்கனவே கத்திரி, வெண்டை போன்ற பயிர்களில் அதிக அளவில் மர்மநோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளது. எனவே இப்பயிர்களை விவசாயம் செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை.

இந்நிலையில் குறுகியகால பயிரான மக்காசோளத்தை தேர்வு செய்து அதிக அளவில் விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர். பெரியகோட்டை, மிந்தரங்குடி, நாச்சியார்புரம், கண்டரமாணிக்கம், அரியக்குடி உள்பட பல்வேறு பகுதிகளில் 20 ஏக்கருக்கு மேல் இப்பயிர் பயிரிடப்பட்டுள்ளது. செலவு குறைவாகவும், லாபம் அதிகமாக இருப்பதாலும், விளைச்சல் அதிகம் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கும் என்பதால் இப்பயிர் பயிரிட விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இப்பகுதியில் கண்மாய், கிணறு மற்றும் போர் பாசனத்தை நம்பியே பயிர் செய்யப்படுகிறது.

தற்போது கடும் கோடை வெயில் நிலவி வருகிறது. இதுதவிர கோடை மழையும் போதிய அளவில் கை கொடுக்கவில்லை இதனால் சாக்கோட்டை பகுதிகளில் உள்ள அனைத்து கண்மாய்களும் வறண்டு காணப்படுகிறது. அதேபோல் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து கிணறு மற்றும் போர்களில் தண்ணீர் இல்லாத நிலை உள்ளது. இதனால் செடிகளுக்கு தினமும் தண்ணீர் பாய்ச்ச முடியாமல் 5 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதனால் அரியக்குடி பகுதியில் நன்றாக விளைந்த நிலையில் மக்கா சோளம் பயிர்கள் அப்படியே முழுவதும் காய்ந்து கருகி வருகிறது. பயிர் இழப்பீடு தோட்டக்கலை பயிர்கள் மற்றும் மக்காசோளம் பயிரிட்டவர்களுக்கும் வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். விவசாயி ஆரோக்கியம் கூறுகையில்," 3 ஏக்கரில் மக்கா சோளம் பயிரிடப்பட்டது. வெயில் அதிகமாக இருப்பதால் பயிர்களுக்கு தினமும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். தண்ணீர் இன்றி நன்றாக விளைந்து அறுவடைக்கு காத்திருந்த அனைத்து பயிர்களும் கருகி விட்டது. இதனால் பல லட்சம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது. எனவே, அரசு உரிய இழப்பீடு வழங்க வேண்டும்" என்றார்.

**ஆராய்ச்சியாளர்கள் கைவிட்ட மண்ணில் "அல்போன்சா" மாம்பழம் சாகுபடி சிவகங்கை விவசாயி சாதனை**

சிவகங்கை : ஆராய்ச்சியாளர்களே கைவிட்ட மண்ணில் சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த விவசாயி ஒருவர், "அல்போன்சா" மாம்பழம் பயிரிட்டு சாதனை படைத்துள்ளார். தென்மாவட்டங்களில் ராமநாதபுரத்திற்கு அடுத்தபடியாக சிவகங்கை மாவட்டம் வறட்சிக்கு பெயர் போனது. செம்மண் சரளை கலந்த பகுதி என்பதால் விவசாயத்திற்கு இம்மண் ஏற்றதல்ல என்ற கருத்து இப்பகுதி விவசாயிகள் மத்தியில் பரவலாகவே ஒரு கருத்து நிலவி வருகிறது.

இருப்பினும் சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் அருகே ஏ.கருங்குளத்தை சேர்ந்த விவசாயி முருகேசன் தனது விடாமுயற்சியால் இம்மண்ணில் இயற்கை உரம் மூலம் விவசாயம் செய்து அசத்துகிறார். இவர் தனது நிலத்தில் அல்போன்சா மாம்பழ மரக்கன்றுகள் நட வேளாண் பல்கலைக்கழகத்தை நாடினார். ஆராய்ச்சியாளர்கள் முருகேசனின் நில மண்ணை சோதனையிட்டு, 'இந்த மண்ணில் அல்போன்சா வகை மாம்பழம் விளையாது' என கை விரித்தனர். ஆனாலும், முருகேசன் அதையே சவாலாக எடுத்துகொண்டு கர்நாடக மாநிலத்தில் இருந்து அல்போன்சா வகை மாம்பழ கன்றுகளை வாங்கி வந்து பயிரிட்டார். சுற்றிலும் மழைநீர் சேகரிப்பு கால்வாய்களை கட்டினார்.

பின்னர் சொட்டு நீர் பாசனத்தின் மூலம் கன்றுகளுக்கு முறையாக நீர் கிடைக்க ஏற்பாடு செய்தார். மரத்திலிருந்து விழும் மட்கிய இலைகள் உட்பட இயற்கை உரத்தையே அதிகம் பயன்படுத்தினார். இதற்கு உடனடி பலன் கிடைத்தது. தரமான அல்போன்சா விளைய தொடங்கின. சுவை மிகுந்த இந்த அல்போன்சா மாம்பழங்கள் மும்பையில் பிரபலமான வாசிம் மார்க்கெட்டில் அதிக வரவேற்பை பெற்றுள்ளது. சிங்கப்பூர் உள்ளிட்ட அயல்நாடுகளுக்கும் ஏற்றுமதியாகிறது. 15 கிலோ மாம்பழங்கள் ஒரு பெட்டியில் வைத்து விலை நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு கிலோ ரூ.120 முதல் 150 வரை தரத்திற்கேற்ப விற்பனையாகிறது. முருகேசனுக்கு உதவியாக அவரது மகன் மதிபாலனும் இருந்து

வருகிறார்.

இதுகுறித்து முருகேசன் கூறுகையில் ‘ஒரு விவசாயி வெறும் விவசாயியாக மட்டும் இருக்கக்கூடாது. அவன் வியாபாரியாகவும் மாறி தான் விளைவிக்கும் பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும். அப்போதுதான் விவசாயம் புத்துணர்வு பெறும். விளையாது என்ற ஆராய்ச்சியாளர்களே கைவிட்ட மண்ணில் அல்போன்சா மரக்கன்றுகள் நட்டு சாதித்தேன். விவசாயிகளும் தங்களுக்கு எதிரான பிரச்னைகளை சமாளித்து சாதிக்க வேண்டும். இதற்கு அரசின் ஒத்துழைப்பும் அவசியம்’ என்றார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால் சோலையார் அணையின் நீர்மட்டம் உயருகிறது



தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால் சோலையார் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

சோலையார் அணை

வால்பாறை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த மார்ச் மாதம் மழையின்றி கடும் வறட்சி நிலவி வந்தது. இதனால் வனப்பகுதிகளில் இருந்த செடி, கொடிகள் காய்ந்தன. மேலும் பரம்பிக்குளம்- ஆழியாறு திட்டத்தின் அடிப்படை அணையான சோலையார் அணைக்கு தண்ணீர் வரத்து குறைந்தது.

மேலும் அணையில் பராமரிப்பு பணி நடைபெற்றதால் தண்ணீர் பரம்பிக்குளம் அணைக்கு திறந்து விடப்பட்டது. இதனால் நீர்மட்டம்

படிப்படியாக குறைந்தது. 160 அடி கொள்ளளவு கொண்ட சோலையார் அணையின் நீர்மட்டம் கடந்த சில நாட்களுக்கு முன்பு 2 அடியாக குறைந்தது.

மழை

இதைத்தொடர்ந்து அணையில் இருந்து தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டது. இந்த நிலையில் வால்பாறை வட்டார பகுதிகளில் கடந்த சில நாட்களாக அவ்வப்போது மழை பெய்து வந்தது. மேலும் ஒரு சில நாட்கள் பலத்த மழையும் பெய்தது. மழையினால் அணைக்கு வரும் தண்ணீரும் அதிகரித்தது.

இதன் காரணமாக சோலையார் அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்தது. நேற்று காலை நிலவரப்படி சோலையார் அணையின் நீர்மட்டம் 10.60 அடியாக உயர்ந்து இருந்தது. அணைக்கு வினாடிக்கு 59 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

10 அடியாக உயர்ந்தது

வால்பாறை வட்டார பகுதி முழுவதும் தொடர்ந்து கடந்த 20 நாட்களுக்கும் மேலாக பெய்த மழை காரணமாக வெறும் 2 அடியில் இருந்த சோலையார் அணையின் நீர்மட்டம் உயர்ந்து 10 அடியை எட்டியுள்ளது. இந்த நிலையில் நேற்று காலை முதல் வால்பாறையில் வெயில் அடித்தது.

மீண்டும் மழை பெய்யும் பட்சத்தில் அணையின் நீர்மட்டம் உயர்ந்து, மின் உற்பத்தி தொடங்க வாய்ப்பு உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.